முருகப்பெருமான் துணை

**மகான் முருக நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.06.2021, புதன்கிழமை

1. தருமராசனே அரங்கா போற்றி
   தரணி காத்திடும் தேசிகா போற்றி
   கருமவினை வென்று மக்களை
   காத்தருளவந்த ஞானியே போற்றி
2. போற்றியே யோகபிரசன்ன ஆசி
   புகலுவேன் பிலவ விடைதிங்கள்
   உற்றதொரு மூவாறோர் திகதி புந்திவாரம்
   (பிலவ வருடம் வைகாசி மாதம் 19ம் நாள், 02.06.2021, புதன்கிழமை)
   உயர்வாக முருக நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை பொருள் கண்டஞானி
   ஞானமதை உலகோர் ஏற்றுவர
   ஞான உலகம் ஆகும் சடுதி
4. சடுதி மாற்றம் நடக்க வேண்டி
   சற்குருவாய் மண்ணில் அவதரித்து
   இடரில்லா ஞானக் குடில் அமைத்து
   ஏழாம் படைவீடாக்கி மக்களுக்கு
5. மக்களுக்கு சரவணச் சுடரேற்றி
   மாதவ பலம்தனை வரமாக அருளும்
   சக்திமிக அரங்க ஞானியரின்
   சன்மார்க்க பாதையை விட்டகலா
6. அகலா உலகோர் தொடர்ந்துவர
   அரங்கன் தருமத்தை செய்துவர
   அகிலம் எங்கிலும் தருமபலமாகி
   ஆபத்தில்லா நிலை காணும்
7. காணவே அரங்கன் வழிவரும்
   கட்டளையாக உபதேசங்களை
   ஞானமாக மக்கள் ஏற்றிட
   ஞானவான்களாகும் ஆசி கிட்டி
8. கிட்டியே மக்களிடை பாதுகாப்பு
   குறைவிலா இறை ஆற்றல் கூடி
   தட்டாது சர்வபலமும் பெருகி
   தரணியோர் அழியாமை காண்பர்
9. காண்கவே பேரிடரையும் வெல்லும்
   கட்டுப்பாடான வழிமுறைகளை
   உண்மைபட உலகோர் ஏற்று
   உயர்பூசையாக ஞானிகள் பூசை

10. பூசைசெய்து வருதல் காண
புண்ணியமான தருமமதை செய்துவர
நேசமுடன் ஞானிகள் ஆசியும்
நிலைத்தன்மையும் கூடி இனிதே

11. இனிதே உலகம் பாதுகாப்புறும்
இனிமேல் அழிவுநிலை அகன்று
கனிவேலவன் தயவால் காப்புபெறும்
கண்டுரைத்த யோகபிரசன்ன ஆசிமுற்றே

–சுபம்–